[18th July 1964

அப்படியானால் என்னென்ன யோசனைகள் சொன்னார்கள்? அவை பரிசீலனை செய்யப்பட்டனவா? அதிலே என்ன ரகசியம் இருக்கலாம் என்று தெரியவில்லை.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அதிலே பல ரகசியங்கள் பேசப்பட்டன. நான் முதலிலேயே சொன்னேன் . . .

MR. SPEAKER: The hon. Member asks about the ways and means adopted to check black-marketing. Anyhow, the hon. Member may put a separate question if he wants.

திருமதி சி. குழந்தையம்மாள்: அங்கே நடந்த மகாநாட்டிலே என்ன ரகசியங்கள் பேசிக்கொண்டாலும் கவலை இல்லை. கிராமங்களிலே இருக்கிறவர்களுக்கு சர்க்கரை தாராளமாகக் கிடைக்கவில்லை என்பது குற்றச்சாட்டு. கிராமத்திலுள்ளவர்கள் ஒரு கிலோவுக்கு ரூ. 2-1/2 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு கிலோ என்பது முக்கால் பவுண்டு கூட இல்லை. அந்த அளவுக்கு கிராமங்களில் விலை ஏற்றம் இருக்கிறது. கிராம மக்களுக்கு சர்க்கரை நியாய விலைக்குக் கிடைப்பதற்காக பேசப்பட்ட ரகசியம் வெளிவர வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்.

MR. SPEAKER: The hon. Member has made a speech and not put a question.

Spindles for Madras State

* 546 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of spindles allotted for Madras State during the Third Five-Year Plan;

(*b*) the number of spindles allotted for private sector and co-operative sector; and

(*c*) the total number of spindles licensed in Madras State so far during the current plan—

(i) in the private sector;

(ii) in the co-operative sector?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Under the Third Five-Year Plan, one lakh spindles were allotted to Madras State.

(*b*) & (*c*) No separate allotment was made for the private and the co-operative sectors. Apart from the allotment mentioned in the answer to clause (*a*) above, *ex-gratia* allotments of spindles have been made on an *ad hoc* basis for reasons such as expansion of uneconomic units to the minimum economic level, for the manufacture of textiles for export, etc. The total spindlage actually sanctioned during the Third Plan is 5,32,688 spindles for the private sector and 1,20,000 spindles for the co-operative sector.

திரு. கே. ஏ. மதியழகன்: இப்படி ஒதுக்கப்பட்ட கதிர்களில் தனியார் துறையிலிருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன? அதில் யார் யாருக்கு உரிமை வழங்கப்பட்டது? அவர்களுடைய

பெயரின் பட்டியல் என்ன? எந்தெந்த மாவட்டங்களில் இந்த நூற்பு ஆலைகள் அமையும் என்பதைச் சொல்லுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் ஒரு ஸ்டேட்மென்ட் மேஜை மீது வைக்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி : கூட்டுறவு நூற்பு ஆலை வழங்கப்பட்ட இடங்களில் ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தனியார் துறைக்கு மாற்றிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி உத்தேசம் இல்லை. கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு, கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : எகனமிக் யூனிட் என்ற அளவு எத்தனை ஸ்பிண்டில்கள்? இந்த மாகாணம் முழுவதற்கும் எகனமிக் யூனிட் அளவுக்கு, நூற்பு ஆலைகளின் மொத்தத் தொகையைச் சேர்த்துப் பார்த்தால், எவ்வளவு கதிர்கள் தேவைப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கட்டுபடியாகக் கூடிய யூனிட் என்பது அந்தந்த காலத்தைப் பொருத்து நிர்ணயம் செய்யப்படுகிறது. இதற்கு முன்பு 12,000 கதிர்கள் இருப்பதை ஒரு எகனமிக் யூனிட்டாகக் கருதி வந்தோம். 1963, அக்டோபரிலிருந்து, 26,000 ஸ்பிண்டில்கள் ஒரு எகனமிக் யூனிட் என்று கருதுகிறோம். அந்த விதமான எகனமிக் யூனிட்டாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனுப்போட்டவர்களுக்கு ஐந்து லட்சம் சில்லரை ஸ்பிண்டில்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு பேர்கள் இன்னும் அன்-எகனமிக் யூனிட் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : நமது மாநிலத்திற்கு இன்னும் அதிகப்படியான கதிர்கள் தேவை என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கொடுத்திருக்கிற ஸ்பிண்டில்களே இன்னும் யூடிலைஸ் ஆகவில்லை. மேற்கொண்டு லாப்ஸ் ஏற்படுமானால், அதையும் இந்த ராஜ்ய சர்க்கார் பெறுவதற்கு முயற்சி செய்யும்.

நூற்பு ஆலை

* 547 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டத்தில் தனியார் துறையில் நூற்பு ஆலை ஒன்று அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?